සමාජ සවිබලගැන්වීම් හා සුබසාධන අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT AND WELFARE

දිවිනැගුම සංවර්ධන දෙපාර්තමේන්තුව
வாழ்வின்எழுச்சி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Divineguma Development**

1වන අධියර,4 වන මහල, සෙත්සිරිපාය, බත්තරමුල්ල.
1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல
1st 4th floor, Sethsiripaya ,Battaramulla

මගේ අංකය / எனது இல / My No: DDD/HO/4/ Circular/2016

ඔබේ අංකය / உமது இல / Your No: ……………………………

දිනය / திகதி / Date: 2016.05.13

வாழ்வின் எழச்சி சுற்றறிக்கை இலக்கம் 2016/4.

மாவட்ட செயலாளர்/ மாவட்ட வாழ்வின் எழுச்சி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி,
மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளர்.
……………………………………………….

## வாழ்வின் எழுச்சி வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டம் 2016

**“வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டமானது”** குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வருமான நிலையினை உயர்த்துவது சுகாதார மற்றும் போசனை மட்டத்தினை அதிகரிப்பது, தொழில் வாய்ப்புகளை விரிவு படுத்துதல் ஊடாக வறுமை நிலையினை மிகக் குறைந்த மட்டத்திற்கு ஆக்குவதனைகுறிக்கோளாகக் கொண்டு செயற்படுத்தப் படுவதுடன் அதனுடாக உள்ளுர் உற்பத்திற்கு குறைந்த வருமானம் மேலும் குடும்பங்களின் மக்களது பங்களிப்பினை மேலுயர்த்தஉத்தேசிக்கப்பட்டுள்ளது.

சமுதாய அடிப்படை அமைப்புகள், வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் உட்பட குறித்த தொழிநுட்ப உதவிச் சேவைகளை வழங்கும் ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின்கூட்டுப் பங்களிப்புடன்மிகக் கூடிய அபிவிருத்தித் திறன்களுடன் வாழ்வாதார கருத்திட்டங்களை இனங்காண்பதும் சிறியளவிலான தொழில் முயற்சியாளர்களின் முன்னேற்றமும், புதிய தொழில் முயற்சியாளர்களின் உருவாக்குவதும் தொழிற்சந்தைகளுக்குப் பொருத்தமான பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கான தொழில் பயிற்சிகளை வழப்படுதுதளையும்நோக்காகக் கொண்டுகருத்திட்டங்களைதிட்டமிடல் வேண்டும்.

மாவட்டத்திற்கு ஒதுக்கப்படுகின்ற நிதி ஒதுக்கீடுகளின் அளவானது வீதாசார அடிப்படையில் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் பகிரலாகாது என்பதுடன் கீழுள்ள பிரகாரம் அந்தந்த பிரிவுகளின் வீகிதாசாரத்திற்கு முன்னுரிமை வழங்கி கருத்திட்டத்தினை செயற்படுத்துதல் வேண்டும்.இந்த ஆண்டின் இறுதியில் வலுவூட்டப்பட்ட பயனாளிகள் தொடர்பில் ஆய்வொன்றினை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | අධ්‍යක්ෂ ජනරාල් / பணிப்பாளர் தலைமையதிபதி / Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් / மேலதிக பணிப்பாளர்தலைமையதிபதி / Additional Director General | අධ්‍යක්ෂ (පාලන) / பணிப்பாளர் (நிர்வாகம்) / Director (Administration) | කාර්යාලය / அலுவலகம் / Office |
|---|---|---|---|---|
| Tel- | 011-2873802/2872202 | 011-2871672 | 011-2873799 | 011-2887280 |
| Fax - | 011-2889002 | 011-2887280 | 011-2873996 | **011- 2887722**(Hotline) |
| E-mail- | dg@divineguma.gov.lk | adg@divineguma.gov.lk | diradmin@divineguma.gov.lk | |

| தொ.இல | பிரிவு | வீதம் (%) | விசேட விடயங்கள் |
|---|---|---|---|
| 1 | விவசாய அபிவிருத்தி | 20 | தேவைப்படின் மாத்திரம் இந்த வீதத்தினை5% த்தால் குறைத்து அல்லது அதிகரிக்கின்றவாறு சீராக்கஞ் செய்து கொள்ள முடியும் (உயர்ந்த பட்சம் 60%) |
| 2 | கால்நடை வள அபிவிருத்தி | 18 | |
| 3 | மீன்பிடி நடவடிக்கைகள் அபிவிருத்தி | | |
| 4 | சிறியளவிலான கைத்தொழில் மற்றும் தொழிற் முயற்சியளர்களினது அபிருவித்தி | 22 | |
| 5 | தொழிலை இலக்காக் கொண்ட தொழிற் பயிற்சி வேலைத்திட்டம் | 40 | இந்த வரையனையினை எவ்விதத்திலும் குறைக்கலாகாது (ஆகக்குறைந்தது 40%) |

## 01. விவாசாய அபிவிருத்தி வேலைத்திட்டம்

**உத்தேச வேலைத்திட்டங்கள்:-**

1.1 விவசாய பயிர்கள் சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் மேம்பாடு.
1.2 வெட்டு மலர் மற்றும் அலங்காரத் தாவரப் பயிர்ச் செய்கை.
1.3 பருவகால மல்லாத பயிர்ச்செய்கை உட்பட விசேட விவசாயக் கருத்திட்டங்கள்.

### 1.1விவசாய பயிர்கள் சார்ந்த பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகளின் மேம்பாடு.

கீழ்காட்டப்படுகின்ற விதத்தில் கருத்திட்டங்களை இதன் கீழ் செயற்படுத்த முடியும்.

- கொரக்காப்புளி பேஸ்ட்,வெள்ளப்பூடு,நெல்லி, வெரலிக்காய், மாங்காய், அன்னாசி, புளியம்பழம், போன்ற பழவகைகளின் உற்பத்திகள் (பழச்சாறு, பழரசம்,பழப்பாகு)போன்றவை.
- மிளகாய், வாசனைத்திரவியங்கள், மஞ்சல்,போன்ற வாசனைத்திரவியங்களின் உற்பத்தி.
- உள்ளுர்க் கிழங்குகளிலிருந்து தயாரிக்கப்பட்ட உற்பத்தின் (உதாரணம்Bites வகைகள்)
- குரக்கன்,கித்துள் மா உற்பத்தி.
- உள்ளுர் மருந்து பானங்கள் (கற்றாழை,வல்லாரை,கருவா,ஆடாதோடா போன்றவைகள்)
- பால் சார்ந்த உற்பத்திகள் (யோகட், போத்தலில் அடைக்கப்பட்ட பால்,பால் டொபி, தயிர்)

**1.2 வெட்டுமலர்தாவரங்கள் மற்றும் மலர்ச் செடிகளின் பயிரச் செய்கை.**

- அந்தூரியம், ஓக்கிட், கானோவுன் போன்ற மலர் வகைகள்.
- அலங்கார தாவர வகைகள்

**1.3 பருவமல்லாக் கால பயிர்களின் பயிர்ச் செய்கையும் விசேட விவசாய கருத்திட்டங்களை செயற்படுத்தலும்.**

கூடிய விலை ஒன்றுடன் மிகச் சிறந்த உள்நாட்டு, வெளிநாட்டு சந்தை வாய்ப்புகளை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடியதாகப் பருவகால மல்லாத காலத்திலும் பயிரிடக்கூடிய பயிர்வகைகள் மற்றும் பொருத்தமானவைகளை பிரதேச விவசாயத்திணைக்களத்தின் சிபாரிசுகளுடன் இனங்காணப்படுதல் வேண்டும்.

**பருவமல்லாக் காலப்பகுதியில் பயிரிடக்கூடிய பயிர் வகைகள்.**

1. பெரிய வெங்காயம்
2.உருளைக்கிழங்கு
3.மிளகாய்

4.வாழை, மா, பப்பாசி, கொடித் தோடை, ரம்புட்டான் போன்ற பழ வகைகள்.

- மன்னார், அம்பாந்தோட்டை,மொனராகலை, வவுனியா போன்ற மாவட்டங்களிலும் தம்புளை மற்றும் தந்திரிமலை போன்ற பிரதேசங்களிலும் பருவமல்லாத கால பெரிய வெங்காயப் பயிர்ச்செய்கையினை மேற்கொள்ள முடியும்.
- யாழ்மாவட்டத்திலும் பருவமால்லாத காலத்தில் உருளைக்கிழங்குகளை வெற்றிகரமாக பயிரிடுதல், பதுளை மாவட்டத்தில் Hydroponics tunnel இல் விதை உருளைக்கிழங்கு உற்பத்திகள் மேற்கொள்ளப்படுவதனால் அப்பிரதேசத்தில் இக்கருத்திட்டங்களை பிரபல்யப்படுத்தக்கூடிய ஆற்றலுள்ளன.
- பச்சை மிளகாய்க்கு தேசிய ரிதீயாக கூடிய கேள்வி இருப்பதனால் வரண்ட பிரதேசங்களில் பொருத்தமான காலங்களில் பருவமால்லாத காலப்பகுதியில் மிளகாய்ப் பயிர்ச் செய்கையினை ஊக்குவிக்க முடியும்.
- விவசாயத் திணைக்களத்தின் தலையீட்டுடன் ஏற்கெனவே இதரை, கதலி,கோழிக்குட்டு, சிவப்பு வாழை போன்ற வாழைப்பழங்களின் உற்பத்திகளையும் விநியோகிக்கும் பொருட்டு வெளிநாட்டு வர்த்தகஉடன்படிக்கைகள் கைச்சாத்திட்டுள்ளதனால் அத்திணைக்களக்துடன் கூட்டினைந்து புதிய பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளவும் நடைமுறையிலுள்ள பயிர்ச் செய்கைகளை மேம்படுத்தவும் வேண்டும்.
- வெளிநாட்டில் கூடிய கேள்வியுள்ள பருவகாலமல்லாத காலத்திலும் அறுவடை பெறக்கூடியமாங்காய் இனமான TJC(tom Ejc)அனுராதபுரம், பொலனறுவை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநெச்சி,மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, அம்பாந்தோட்டை, மொனராகலை, புத்தளம் போன்ற வரண்ட வலய மாவட்டங்களில் மிக வெற்றிகரமாக பயிர்ச் செய்யக்கூடிய ஆற்றல்கள் உள்ளன. இதன் பொருட்டு விவசாயத் திணைக்களமும், கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய மற்றும் கிராமிய கற்கை நிலையத்துடன் ஒன்றினைந்த தொழில்நுட்ப அறிவினைப் பொற்றுக்கொள்ளுதல் வேண்டும்.
- மேலே குறிப்பிடப்பட்ட பயிர்களுக்கு மேலதிகமாக கூடிய கேள்வியுள்ள பயிர்வகைகளையும் இதன் கீழ் பயிரிட விவசாயிகளை ஊக்குவித்தல் வேண்டும்.

## 02. கால்நடை வள அபிவிருத்தி வேலைத்திட்டம்.

**2.1 மாட்டுத் தொழுவங்களை நிர்மானிப்பதும் புனரமைப்பதும்**
**2.2 குடிசை சார்ந்த கோழி வளர்ப்புக் கருத்திட்டம்.**

### 2.1 மாட்டுத் தொழுவங்களை நிர்மானிப்பதும்புனரமைப்பதும்.

கால்நடை வள வைத்திய அதிகாரி அல்லது கால்நடை வள ஆலோசகர்கள் ஊடாக மாட்டுத் தொழுவத்தின் வரைபடத்தினைப் பெற்றுக்கொண்டு அவர்களினது சிபாரிசுகளின் பிரகாரம் நிர்மான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

### 2.2 குடிசை சார்ந்த கோழி வளர்ப்புக் கருத்திட்டம்.

- இக்கருத்திட்டத்தில் ஒருமாத வயதினையுடைய வணிக மற்றும் உள்ளுர் கலப்பினக் கோழிக்குஞ்சுகள் (உதாரணமாககரந்தகொள்ளை இனம்) 10-20 இடைப்பட்ட எண்ணிக்கையிலான குடிசை சார் உற்பத்திகளாக வளர்ப்பதற்கும் அல்லது 100 கோழிக்குஞ்சுகளையோஒரு பயனாளிக்கு வழங்கமுடியும்.
- ஒரு மாத வயதையுடைய கோழிக்குஞ்சுகளை பெற்றுக் கொள்வதில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஒருநாள் வயதையுடைய குஞ்சுகளை வழங்கி அக்குஞ்சுகளின் பாதுகாப்பு (வளர்ப்பது) தொடர்பில் பயனாளிகளுக்குத் தேவையான தொழிநுட்ப அறிவை வழங்வது அத்தியவசிமானதாகும்.
- கோழிகளுக்கு கூடு அவசியமானது என்பதுடன் முட்டை அடைகாப்பதன் மூலம் மீண்டும் குஞ்சுகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனால் சேவல்கள் இரண்டினையும் இக்கருத்திட்டத்தின் பொருட்டு வழங்குவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.
- செயற்கை உணவு கலப்படமற்ற நாட்டுமுட்டையின் பொருட்டு அதிகளவான கேள்வியுள்ளது அத்துடன் கோழிகளின் கழிவுப் பொருட்களை வீட்டுத் தோட்டச்

செய்கையின் பொருட்டு பயன்படுத்த முடியும் என்பதனால் அதற்கு பயனாளிகளை ஊக்குவிப்பது அத்தியவசியமானதாகும்.

## 03. மீன்படிக் கைத்தொழில் அபிவிருத்தி.

மீன்பிடித் திணைக்களம் மற்றும் நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஒத்துழைப்புடன் பிரதேசத்திற்குப் பொருத்தமான பிரகாரம் கீழ் குறிப்பிடப்படும் மீன்பிடிக் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

3.1 அலங்கார மீன் வகைகள், மற்றும் நீரியல் தாவர வளர்ப்பு.
3.2 கருவடு, மாசி ஜாடியிடல் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட மீன்பிடி உற்பத்திகளின் மேம்பாடு.
3.3கடல்த் தாவர வளர்ப்பு (விசேடமாக யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகியமாவட்டங்களில்)

## 04. சிறுக்கைத்தொழில்கள் மற்றும் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி வேலைத்திட்டம்.

சிறியளவிலான உற்பத்திக் கைத்தொழில்களை ஊக்குவித்தல் மற்றும் தொழில் முயற்சிகளின் மேம்பாட்டின் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் கருத்திட்டங்களை செயற்படுத்துதல் வேண்டும்.

4.1 சிறியளவிலான அரைக்கும் ஆலைகளை ஆரம்பித்தல்.
4.2 கையடக்கத்தொலைபேசி திருத்தலும், தொடர்பாடல் நிலையங்களை அமைத்தலும்.
4.3 தென்னை, பனை, தித்துள் சார்ந்த உற்பத்திகள்.
4.4 பிரதான உற்பத்திக் கைத்தொழில்களுக்கு தேவையான மேலதிக உதிரிப்பாகங்களை உற்பத்தி செய்தல்.
4.5 ஒட்டோ மொபைல் சேவை (மோட்டார் கைத்தொழில்,டிங்கரின், நிறம் பூசுதல், சேவை நிலையங்கள்,குஷன் (இருக்கைகளை அமைக்கும் வேலைத்தளங்கள்) போன்றவை)

## 05. தொழிலை இலக்காகக் கொண்ட தொழில்ப்பயிற்சிப் பாடநெறித் திட்டங்கள்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்துஉழைப்புப்படையாய் இணைகின்ற 18-35 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் யுவதிகளை இலக்காகக் கொண்டு செயற்படுத்தல் வேண்டும்.

செயற்படுத்த உத்தேசித்துள்ள பாடநெறிகளுக்கான உதாரணங்கள்.

**ஹோட்டல் துறையில் பயிற்சிகள்/இயந்திர செயற்பாட்டுப் பயிற்சி/ பார ஊர்தி சாரதிப் பயிற்சி/ மோட்டார் தொழில்நுட்பவியல்கள்பாடநெறி/ மின்சார மற்றும் இலெகிட்ரோயில் பாடநெறி/தாதி உதவியாளர்ப்பயிற்சி.**

# வேலைத்திட்டத்தினை செயற்படுத்தல்.

கீழ் குறிப்பிடப்படும் ஆலோசனைகளைப் பின்பற்றி இணைப்பு 01 இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள தொழில் பயிற்சி நிலையங்கள் அல்லது தங்களது பிரதேசங்களிலுள்ள பிற அங்கிகரீக்கப்பட்ட அரசாங்க/தனியார் தொழில் பயிற்சி நிலையங்களின் உதவினைப் பெற்றுக்கொண்டு வேலைத்திட்டத்தினை செயற்படுத்துதல் வேண்டும்.

**அ)** தொழில்வாய்ப்புக்காக காத்திருக்கின்ற இளைஞர் யுவதிகளின் சுய விபரத்தரவுகளைப் பெற்றுக்கொண்டு அவர்களது கல்வித்தரதிற்கும் விரும்பிய பாடத்துறைக்குப்பொருத்தமானவாறு கட்டாயமாக தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு தொழில்ப்பயிற்சிகளில் ஈடுபடச் செய்தல் வேண்டும்.

**ஆ)** மரபு ரீதியான தொழில்களில் ஈடுபட்டுள்ள இளைஞர் யுவதிகள் வெளிநாட்டு தொழில் வாய்ப்பின் பொருட்டு விருப்பமுள்ள இளவயதினர் தொடர்பிலும் கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும்.

இ)இனங்காணப்பட்ட பயிற்சிப் பாடநெறிகளின் பொருட்டு செலவு மதிப்பீடு ஒன்றினை குறித்த பயிற்சி நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் அதற்கு பாடநெறிக்கட்டணம், எழுது கருவிகள் மற்றும் பிற உபகரணக்கட்டணங்கள் பிரயாணச் செலவுகள் போன்ற செலவுகளையும் உள்ளடக்கமுடியும்.

ஈ)பாடநெறியினை இலவசமாக வழங்குகின்ற சந்தர்ப்பத்தில் கூட பயிலுனர்களின் பொருளாதார நிலையினையும் கவனத்தில் கொண்டு உணவு,பிரயாணச் செலவுகள் மற்றும் தங்குமிட வசதிகள் போன்ற செலவுகளையும் மதிப்பீட்டில் உள்ளடக்க முடியும்.

உ) பயிற்சி காலம் பல வருடங்களைக் கொண்ட கைத்தொழில்/ தொழில்நுட்பத்துரை பயிற்சிப்பாட நெறியின் பொருட்டு இந்த ஆண்டிற்கான செலவுகளை மேற்கொண்டு கருத்திட்டங்களை ஆரம்பித்து ஏனையகட்டங்களை அந்தந்த ஆண்டில் செயற்பாட்டுத் திட்டமிடலில் உள்ளடக்க முடியும்.

ஊ) பயனாளி தொழில் செய்யும் வரையும் பெற்றுக் கொண்ட கடன் தொகையினை செலுத்தி முடிக்கும் வரையும் சமுதாய அடிப்படை அமைப்பு மற்றம் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஊடாக தொடர்ச்சியானபின்பணி தொடர் ஆய்வுகளை மேற்கொள்வதன் ஊடாக வேலைத்திட்டங்களை வெற்றிகரமாகிக் கொள்ளல் வேண்டும்.

## 06.பொது ஆலோசனைகள்

**6.1** கிராமிய சமுர்த்திச் சங்கங்களின் செயற்பாடுள்ளதாக இருப்பின் இனங்காணப்படுகின்ற கருத்திட்டங்களை அச்சமுர்த்தி சங்கக் கூட்டத்தில் மீளாய்வு செய்து. கூட்ட சபையில் நிறைவேற்றி கூட்ட அறிக்கையில் உட்படுத்திக் கொள்ளப்படல் வேண்டும்.

**6.2**கடந்து இரண்டாண்டுகளில் பொருட்கள், இயந்திர உபகரணங்கள் போன்றவற்றினை வழங்கிய குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படலாகாது என்பதுடன் தனிப்பட்ட நட்பினையும் கவனத்தில் கொள்ளாது. கூடிய திறனையுடைய பலனுள்ள கருத்திட்டங்களை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும்.

**6.3** மூன்று வருடத்திற்கு குறைந்த காலத்திற்குள் கவனத்தில் கொள்ளத்தக்க அதிகவருமான மட்டத்தினால் வலுவூட்டக்கூடிய பயனாளிகளை கருத்திட்டங்களில் ஈடுபடச் செய்ய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். அதிக பயனாளிகளுக்கு நிவாரணத்தினை வழங்கக்கூடிய நோக்கில் பொருட்கள்,இயந்திர உபகரணங்கள், தையல் இயந்திரங்களை கொள்வனவு செய்து விநியோகிப்பது எவ்விதத்திலும் மேற்கொள்ளலாகாது. (இனங்காணப்படுகின்ற ஏதேனும் ஒரு கருத்திட்டத்தின் நடவடிக்கையொன்றாக ஏதேனும் பொருளை/உபகரணம் ஒன்றினை அல்லது பலவற்றினை கொள்வனவு செய்வதற்கு தடையில்லை)

**6.4** கருத்திட்டத்தினை திட்டமிடும் போது சந்தைப்படுத்தல் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் எதிர் கால வர்த்தக ஒப்பந்தங்களை செய்து கொள்வது அத்தியவசியமாக அமையும்.

**6.5** கருத்திட்ட அறிக்கையினை தயாரிப்பது வாழ்வின் எழுச்சி சுற்றறிக்கை இலக்கம் 2015/7இன் இணைப்பு இலக்கம் 01 இன் பிரகாரமாகும். ஓவ்வொருகருத்திட்டப் பிரேரனையும் குறித்த சமுர்த்தி சங்கத்தின் தலைவர்/செயலாளர் மற்றும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர், வலய முகாமையாளர்கள்,கருத்திட்ட முகாமையாளர்களின் சிபார்சுடன் தலைமையக முகாமையாளருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும் மேலும் குறித்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்களும்நேரொத்த நிறுவனங்களினதும் சிபாரிசுகளையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**6.6** தலைமையக முகாமையாளர்களால் குறித்த கருத்திட்ட அறிக்கைகளை தனது சிபாரிசுடன் பிரதேச ஒருங்கிணைப்புக்குழு செயற்பாடுள்ளதாக இருப்பின் அதன் இணைக்கப்பாட்டினையும் பெற்றுக் கொண்டு பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**6.7** ஒவ்வொரு வேலைத்திட்டதின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் பயனாளிப் பங்களிப்பினை வழங்க வேண்டியதுடன் அது உழைப்பு, மூலப்பொருள் அல்லது நிதியியல் ரீதியான பங்களிப்பாக இருக்கலாம்.

**6.8** பிரதேச செயலாளரினால் அங்கிகரீக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரனைகளின் பொருட்டு நிதி ஒதுக்கீட்டினையும் கட்டுநிதியினையும் பெற்றுக் கொள்வதற்கு மாவட்ட வாழ்வின் எழுச்சி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி/மாவட்ட வாழ்வின் எழுச்சி பணிப்பாளருக்கு கோரிக்கைகளை முன்வைக்க வேண்டியதுடன் அதற்கமைய கட்டுநிதியினை பெற்றுக்கொள்ள பணிப்பாளர் தலைமையதிபதிக்கு (இணைப்பு இலக்கம் 02 இன் மூலம்) கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

**6.9**பருவம்மால்லாத கால பயிர்ச்செய்கைகள் உட்பட விசேட விவசாயக் கருத்திட்டங்களின் பொருட்டு (1.3 இன் கீழ்) பிரதேச செயலாளரின் சிபாரிசு மற்றும் மாவட்ட செயலாளர்/ மாவட்ட வாழ்வின் எழுச்சி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதி சிபாரிசுடன் குறித்த கருத்திட்ட பிரேரனைகளின்அங்கீகாரம் மற்றும் நிதிஒதுக்கீட்டினைப் பொற்றுக்கொள்ளும் பொருட்டு தலைமைக்காரியாலத்தின் வாழ்வாதார அபிவிருத்தி பிரிவுக்கு முன் வைத்தல் வேண்டும்.

**6.10**கருத்திட்டத்தினைஆரம்பித்தல்,தொடர்ச்சியாக நடாத்திச்செல்லல், பயனாளிகளின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கடன் தவணைப்பணத்தினை செலுத்துதல் என்பன முறையான பிரகாரம் மேற்கொள்ளப்படுவதாக பயனாளிகளிடம் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும். பிரதேச செயலாளர் அல்லது அதற்குப்பதிலாக அதிகாரமளிக்கப்பட்ட வாழ்வின் எழுச்சி தலைமையக முகாமையாளர் பயனாளிகளிடம் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்வது அத்தியவசியமானதாகும் (இதன் பொருட்டு 2015/7 இன் சுற்றறிகையின் மாதிரி படிவத்தினைப் பயன்னடுத்தவும்)

**6.11**தொழிற்பயிற்சி பாடநெறிகள் தவிர்ந்த ஏனையபிரிவுகளின் கருத்திட்டங்களின் பொருட்டு அத்தியவசியமாக விடயத்தோடு இணைந்த பயிற்சி வேலைத்திட்டங்களை வழங்க வேண்டியேற்பட்டால் முறையான திட்டமிடல் ஒன்றினை தயாரித்து பணிப்பாளர் தலைமையதிபதியின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**6.12** செயற்படுத்தப்படுகின்ற ஒவ்வொறு கருத்திட்டம் தொடர்பிலும் தொடர்ந்து பலவருடங்களுக்கு பின்னனி ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டியதுடன் அக்கருத்திட்டம் மூலம் அந்தந்த குடும்பங்களில் பொருளாதார சமுக ரீதியாக ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் (வருமானம், செலவு,போசனை போன்றன) மதீப்பிடலுக்குப்படுத்தப்படல் வேண்டும்.

**6.13**கருத்திட்டத்தின் பொருட்டான இறுதிக்கொடுப்பனவுகள் 2016.12.05 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு ஏற்ற விதத்தில் கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டியதுடன் எவ்விதத்திலும் குறைவேலைகளைக் கொண்டிருத்தலாகாது.

**6.14**மிகப் பயன்னுள்ள கருத்திட்டங்களை தெரிவு செய்து கொள்வதற்கு வலய உதலியாளர்கள், வலய/கருத்திட்ட முகாமையாளர்கள், மகா சங்க முகாமையாளர்கள் மற்றும் தலைமையக முகாமையாளர்களைக் கொண்ட குழு ஒன்றினை நியமிப்பது அத்தியவசியமானதாகும். என்பதுடன் இவ்வாண்டின் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் தோல்வியடைந்தால் அதற்கு இந்தக்குழு உட்பட கருத்திட்ட முகாமையாளர் தனிப்பட்ட வகையில் பொறுப்புக்களை வகித்தல் வேண்டும்.

**6.15**கட்டுநிதியினை விடுவிப்பதற்கு முன்னர் மாவட்ட/பிரதேச உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி இனங்காணப்பட்ட கருத்திட்டங்களிலிருந்து 10%த்தினையாவது தெரிவு செய்து அவை பயனுள்ள மற்றும் நிலையான கருத்திட்டமா என்று உறுதிப்படுத்திக்கொண்டு மதிப்பீட்டறிக்கை ஒன்றினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

**07.கால வரையறை.**

| தொ. இல | செயற்பாடுகள் | திகதி |
|---|---|---|
| 01 | சுற்றறிக்கை தொடர்பில் உத்தியோகத்தர்களை விளக்கமளித்தல் | 2016.05.10 ஆம் திகதிக்கு முன்னர் |
| 02 | கிராமிய மட்டத்தில் சகல பிரிவினர்களும் ஒன்றினைந்து கருத்திட்டத்தினை இனங்காண்பதும் சமுர்த்தி சங்கத்தில் அதனை முன்னனிக் கருத்திட்டம் ஒன்றாகுமுள்ள நிறைவேற்றிக் | 2016.05.31 ஆம் திகதிக்கு முன்னர் |

| | | |
|---|---|---|
| | கொள்ளல் | |
| 03 | கருத்திட்டத்தினைத் திட்டமிடல்/சிபாரிசுகளை பெற்றுக்கொள்ளல்/அங்கிகரீத்துக்கொள்ளல். | 2016.06.07 ஆம் திகதிக்கு முன்னர் |
| 04 | கட்டுநிதி கோருதல் | 2016.06.10 ஆம் திகதிக்கு முன்னர் |
| 05 | கருத்திட்டத்தினைப் பூர்த்தி செய்தல் | 2016.11.15 ஆம் திகதிக்கு முன்னர் |
| 06 | முன்னேற்றத்தினை அறிக்கையிடல் | |

**08. கருத்திட்ட கண்காணிப்பு, நெறிப்படுத்தல் மற்றும் மதிப்பீட்டு நடவடிக்கைகள்.**

8.1 பிரதேச மட்டத்திற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி மொத்த கருத்திட்ட கண்காணிப்பு மற்றும் பின்னனி தொடர் ஆய்வுகளை மேற்கொள்ளும் முன்னேற்ற மீளாய்வு முறையொன்றினையும் சமூக ரீதியான கணக்காய்வு ஒன்றின் பொருட்டும் தேவையான சூழல் ஒன்றினை தாங்கள் தயாரித்துக்கொள்வதற்கு நடவடிக்கைகளை மெற்கொள்ளல் வேண்டும்.

8.2 முன்னேற்றப் படிவம் (பின்னர் அனுப்பப்படவுள்ளது) மூலம் மாதாந்த முன்னேற்றத்தினை அடுத்து வரும் மாதத்தின் 02ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளரால் இத்திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். (Jeevanopaya@Gmail.com, divinegumalh@yahoo.com)தொலைபேசி இலக்கம் 0112872253, 0112872201).

8.3இந்த வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டம் தொடர்பான தகவல்களை e-வாழ்வின் எழுச்சி (திவிநெகும) கருத்திட்டத்தில் (e-divineguma project)உள்ள கருத்திட்ட மற்றும் வேலைத்திட்ட முகாமைத்துவ மொடியூலில்(Project and progress management module)உள்ளடக்குவதற்கும் முன்னேற்றத்தினை உரிய பிரகாரம் குறிப்பிட்ட தினத்திலேயே முறைமைப் படுத்துவதற்கும் கருத்திட்ட முகாமையாளர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

8.4 தேவைப்படும் எச்சந்தர்ப்பத்திலும் பெற்றுக்கொள்ளக்கூடிய பிரகாரம் கருத்திட்ட தரவுகள், தகவல்கள் மற்றும் புகைப்படங்களை தயாரித்து வைத்துக்கொள்ளல் வேண்டும்.

10. வாழ்வாதார சுழற்சி நிதியம்

வாழ்வின் எழுச்சி சமுதாய அடிப்படை வங்கி மூலம் வாழ்வாதார சுழற்சிக் கடன்களை வழங்குவதனால் ஒழுங்கிணைப்புச் செய்தல் வேண்டும். இவ்வாண்டில் செயற்படத்தப்படுகின்ற கருத்திட்டங்களின் பொருட்டு 50% மான பயனாளியின் பங்களிப்பினை வழங்க முடியாதவிடத்து கருத்திட்டத்தின் தன்மைக்கேற்ப 03 மாத சலுகைக் காலத்துடன் குறிப்பிட்ட வட்டி வீதத்திற்கு உட்பட்டதாக நடவடிக்ககைகளை மேற்கொள்ளல் வேண்டும். தவணைப் பணத்தினை அறவிடும் உயர்ந்தபட்ச கால எல்லையானது 36 மாதங்களாக இருப்பது மிகப் பொருத்தமானதாக அமையும்.

இலகுவான மூலதன விநியோக வசதிகள் தங்களிடம் இருப்பதனால் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் பொருட்டு வழங்கப்படுகின்ற நேரடி நிதி ஒதுக்கீடுகள் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்களிலும் இந்த நிதியின் மூலம் முடியுமான சகல சந்தர்ப்பங்களிலும் கடன் வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

11. நிருவாகச் செலவுகள்

இந்தவேலைத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற அரசாங்க செலவுகளிலிருந்து 1.5%த்தினை நிருவாகச் செலவாக செயற்படுத்த முடியும். இதில் 0.5%த்தினை மாவட்டச் செயலகத்திற்கும் எஞ்சிய 1%த்தினை பிரதேச செயலகத்திற்கும் பிரிந்து செல்லும் விதத்தில் அது இருத்தல் வேண்டும்.

இச்சுற்றறிக்கை தொடர்பில் மேதிக விபரங்கள் தேவைப்படின் 0112873801,0112869824, 0112872253 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாக அல்லது divinegumalh@yahoo.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவும் இந்த அலுவலகத்தின் வாழ்வாதார அபிவிருத்தி பிரிவைத் தொடர்பு கொள்ளவும்.

இச்சுற்றறிக்கை ஆலோசனைகள், நிதிப்பிரமானம், அரசாங்க பெறுகைக்குழு சட்டத்திட்டங்களை பின்பற்றி மற்றும் குறித்த நேரொத்த நிறுவனங்களின் சிபாரிசுகளையும் பெற்றுக் கொண்டு இந்த வேலைத்திட்டத்தினை வெற்றிகரமாகிக்கொள்வதற்கு தாங்கள் உட்பட உத்தியோகத்திர்களிடமிருந்து கிடைக்கின்ற ஒத்துழைப்பினை மதிக்கின்றேன்.

சந்திரா விக்ரமசிங்க.
பணிப்பாளர தலைமையதிபதி,

Translated by ;- M.M.M. Jawhar ( Translator )

பிரதி:-

01. சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை
கௌரவ அமைச்சர் திரு. எஸ்.பி. திஸாநாயக்கா அவர்கள்.– த.கூ.க. பொருட்டு.
02. சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை
கௌரவ பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கா அவர்கள் – த.கூ.க. பொருட்டு
03. சகல மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர்கள் – த.கூ.க. பொருட்டு
04. செயலாளர்,
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு – த.கூ.க. பொருட்டு

05. மேலதிக செயலாளர், (வாழ்வின் எழுச்சி)
சமூக வலுவூட்டல் மற்றும் நலனோனம்புகை அமைச்சு – த.கூ.க. பொருட்டு
06. கணக்காய்வாளர் தலைமையதிபதி,
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் – த.கூ.க. பொருட்டு
07. பிரதமக் கணக்காளர்,
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் – த.கூ.க. பொருட்டு
08. பிரதம உள்ளகக் கணக்காளர்,
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் – த.கூ.க. பொருட்டு
09. சகல பிரிவுத் தலைவர்கள்
வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி திணைக்களம் – த.கூ.க. பொருட்டு
10. சகல பிரதேச செயலாளர்கள் –த.கூ.க.பொருட்டும் உ.ந. பொருட்டும்
11. சகல வாழ்வின் எழுச்சி தலைமைய முகாமையாளர்கள் -உ.ந. பொருட்டும்,மகா சங்க முகாமைத்துவ பணிப்பாளர், வாழ்வின் எழுச்சி கருத்திட்ட, சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் மற்றும் வாழ்வின் எழுச்சி அபிவிருத்த உத்தியோகத்தர்களை விளக்கமளிக்கும் பொருட்டு.

# தொழில் பயிற்சி நிறுவனங்கள்

| தொ. இல | நிறுவனம் | தொலைபேசி இல |
|---|---|---|
| I | இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை, 354/2 4வது மாடி நிபுனத்தா பியச, எல்விட்டிகல, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05 | 011-2596516<br>011-25819041 |
| II | தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை. வெலிக்கடை, ராஜகிரியா | 011-2876386<br>011-2888782-7 |
| II | மனித வலு மற்றும் கைத் தொழில்வாய்ப்புத் திணைக்களம். 9ஆம் மாடி செத்திரிபாய,II கட்டம், பத்தரமுல்ல | 0112187131<br>011-2186022<br>011-2186023 |
| IV | இலங்கை உல்லாசப் பயணத்துறை மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம். 78 காலி வீதி, கொழும்பு 03 | 0112382201<br>011-2382212 |
| V | சிறு தொழில் முயற்சி அபிவிருத்திப் பணியகம் இளைஞர் விவகார அமைச்சு. 420 பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07 | 011-2669240<br>011-2665292 |
| VI | கைத்தொழில் அபிவிருத்திச் சபை, 615 காலி வீதி, கட்டபெத்தை, மொரட்டுவை | 011-2605278 |
| VII | இலங்கை ஜேர்மன் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம். இல 582 காலி வீதி, கல்கிசை | 011-2605625<br>011-2623490<br>011-2638686 |
| VIII | தொழில் நுட்பக் கல்வி மற்றும் பயிற்சியளிக்கும் திணைக்களம். இல 557 ஒல்கோட் மாவத்தை, கொழும்பு 10 | 011-3137290<br>011-2431288 |
| IX | நிர்மானத்துறைப்பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிலையம். இல 123,சௌசிரிபாய, விஜேராம மாவத்தை, கொழும்பு 07 | 011-2686092<br>011-2686236 |

**09.** நிதிஒதுக்கீட்டினைவழங்குதல்.

திணைக்களப் பங்களிப்பானதுமாணியம் ஒன்றாகும் என்பதுடன் மாவட்டத்திற்குஒதுக்கப்படுகின்றஅளவானதுகுறித்தவீதாசாரங்களுக்குபொருத்தமானவாறு இருத்தல் வேண்டும்.

| தொ. இல | கருத்திட்டபிரிவு | திணைக்களப் பங்களிப்பு (மதிப்பிட்டுத் தொகையில்) | | பயனாளியின் பங்களிப்பு | பயனாளிகளைத் தெரிவுசெய்தல் | விசேடவிடயங்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | % | ஊயர்ந்தபட் சதொகை | % | | |
| 01. விவசாயஅபிவிருத்தி | | | | | | |
| | 1.1 விவசாயபயிர்ச்செய்கைசார்ந்தபெறுமதிசேர்க்கப்பட்டஉற்பத்திகள். | 50% | ரூபா 50,000 | 50% | ஏற்கனவே இத்துறையில் ஈடுபட்டவர்கள்/விருப்பம் மற்றும் ஊக்கத்தினைகாட்டுகின்றோர். | தேவையானபயிற்சினைமாவட்டபயிற்சிநிலையம்/அனுராதபுரம்அறுவடைக்குப்பின்னரானதொழில்நுட்பநிலையம்/தேசியதாவரவியல் பூங்காக்களிலிருந்துபெற்றுக்கொள்ளல் |
| | 1.2 வெட்டுமலர்கள் மற்றும் அலங்காரத் தாவரஉற்பத்தி | 50% | ரூபா 50,000 | 50% | | |
| | 1.3 பருவமல்லாதகாலத்தில் பயிர்ச் செய்கைஉட்படவிசேடவிவசாயக் கருத்திட்டங்கள் | 50% | ரூபா 50,000 | 50% | ¼ -1 இற்குமிடப்பட்டஅளவினையுடையகாணிகளைப் பயன்படுத்திக் கூடியவர்கள். | நிதிஒதுக்கீட்டினைவழங்குவதுதிணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் Hydroponics tunnel இவ்விதைஉருளைக்கழங்குபயிர்ச்செய்கயின் பொருட்டுமதிப்பீட்டுத் தொகைக்கேற்பஉயர்ந்தபட்சதொகைவிதைதீர்மானிக்கப்படும். |
| 02 கால் நடைவளஅபிவிருத்தி | | | | | | |
| | 2.1 மாட்டுத் தொழுவநிர்மானமும் திருத்துதலும் | 50% | ரூபா 30,000 | 50% | புதிதாகமாட்டுத் தொழுவம் ஒன்றினைநிர்மானிப்பதற்கும் தற்போதுள்ளமாட்டுத் தொழுவத்தினைதிருத்துவதற்குத் தேவையானவைகள் | கொடுப்பனவுகளைமேற்கொள்ளும் போதுகால்நடைவைத்தியர்களின் சிபாரிசுகளைப் பெற்றுக்கொள்வதுகட்டாயமானதாகும். |
| | 2.2 குடிசைத்துறைசார்ந்தகோழிவளர்ப்பு | | | | | |
| | அ. குடிசைத்துறைமட்டத்தில் | 50% | ரூபா 10,000 | 50% | | |
| | ஆ. வணிகமட்டத்தில் | 50% | ரூபா40,000 | 50% | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 03 | மீன்பிடிஅபிவிருத்தி | | | | | |
| | 3.1 அங்காரமீன் மற்றும் நீர்த் தாவரஉற்பத்தி | 50% | ரூபா 40,000 | 50% | நிரந்தரமாககருத்திட்டத்தினைநடாத்திச் செல்லக்கூடியதனதுவீட்டுக்தோட்டத்தில் இடவசதியுள்ளவிருப்பமும் ஊக்கமுள்ளவர்களையும் இத்துறையில் ஈடுபடச் செய்தல் | |
| | 3.2 கருவாடு,மாசிமற்றும் சாடியில் போன்றபெறுமதிசேர்க்கப்பட்டஉற்பத்திகள் | 50% | ரூபா 40,000 | 50% | | |
| | 3.3 கடற் தாவரஉற்பத்தி | 50% | ரூபா 25,000 | 50% | | |
| 04 | சிறுகைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மைஅபிவிருத்தி | 50% | ரூபா 50,000 | 50% | ஏற்கனவே இத்துறையில் ஈடுபடுவோர் அல்லதுஊக்கத்தினைகொண்டுள்ள புதியதொழில் முயற்சியாளர்கள் | |
| 05 | தொழிலைநோக்காகக் கொண்டதொழில் பயிற்சிகள் | 80% | ரூபா 60,000 | 20% | பாடசாலைக்கல்வியைமுடித்துதொழிற்படையில் சேருகின்ற 18-35 ற்குமிடைப்பட்டவயதினையுடைய இளைஞர் யுவதிகள். | பயனாளியின் பங்களிப்பினைவழங்கமுடியாதசந்தர்ப்பத்தில் தங்களின் சிபாரிசுடன்அங்கீகாரத்தின் பொருட்டுஎனக்குமுன்வைத்தல் வேண்டும். |